TAMIL NADU ... 6 FEB 1981 MADRAS-600 009

# தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை

---

## திங்கட்கிழமை, 1980 ஜூலை 7.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத்தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :—</u>

''கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்.''

சொல்லும்போது உடனிருந்து கேட்டவர்தம் உள்ளத்தைக் கவர்வதோடு, அவ்வாறு கேட்க இயலாதவரையும் ஆவலோடு கேட்கும்படி சொல்வதே சொல்வன்மை ஆகும்.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### ஊராட்சி மன்றத் தேர்தல்களில் வாக்களிப்பதற்கான வயது வரம்பு.

கு. கா. வி. எண் 7—டாக்டர் கே. பி. இராமலிங்கம் திரு. மி. வின்சென்ட்—மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) ஊராட்சி மன்றத் தேர்தலில் 18 வயது வந்தவர்களுக்கு வாக்குரிமை அளிப்பதற்கான திட்டம் எப்போது முதல் அமுலுக்கு வரும் ?

(ஆ) அது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுத்து வருகிறது ?

(இ) தேர்தலை தள்ளிப்போடும் உத்தேசம் ஏதும் உண்டா ?

<u>மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:</u>

(அ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) உள்ளாட்சித் தேர்தல்களில் வாக்களிப்பவர்களின் வயதினை 18 ஆக குறைப்பதுபற்றியும் மற்ற பிரச்சனைகள் பற்றியும் 11–7–1980ஆம் தேதி அன்று நடைபெறவிருக்கும் அனைத்து அரசியல் கட்சித் தலைவர்கள் அடங்கிய கூட்டத்தில் விவாதிக்கப்பட இருக்கிறது.

(இ) இல்லை.

[1980 ஜூலை 7

திரு. மி. வின்சென்ட்: பேரவைத் தலைவரவர்களே, 18 வயது வந்தவர்களுக்கு வாக்குரிமை அளிப்பதன் மூலம் சுமார் எத்தனை இளைஞர்கள் வாக்குரிமை பெறுகிறார்கள்? ஊராட்சி மன்றத் தேர்தல் எப்பொழுது நடைபெறும்? 18 வயது வந்தவர்களுக்கு வாக்குரிமை அளிப்பதற்கான திட்டத்தைக் கொண்டுவர எத்தனை மாத காலமாகும்? எந்தெந்த மாநிலங்களில் 18 வயது வந்தவர்கள் வாக்குரிமை பெறுகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, 18 வயது அடைந்த எவ்வளவு வாக்காளர்கள் இருக்கின்றார்கள் என்றவிவரம் இனிமேல்தான் கிடைக்கப்பெறும். தற்பொழுது கேரளம், மேற்கு வங்காளம், ஆந்திரம் போன்ற மாநிலங்களில் 18 வயது அடைந்தவர்களுக்கு ஊராட்சி மன்றத் தேர்தலில் வாக்குரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. அதேபோலத் தமிழ்நாட்டிலேயும் அளிக்க வேண்டுமென்ற நிலைமையில்தான், வருகிற 11—7—1980ஆம் தேதியன்று நடைபெறவிருக்கின்ற அனைத்து அரசியல் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் விவாதிக்கப்பட இருக்கிறது. 21 வயது அடைந்தவர்களுடைய பட்டியல் ஏற்கனவே தயாராக இருக்கிறது. யார் யார் ஏற்கனவே சட்டமன்றத் தேர்தலில் வாக்குரிமை பெற்றிருந்தார்களோ அவர்களெல்லாம் ஊராட்சி மன்றத் தேர்தல், நகராட்சி மன்றத் தேர்தல், மாநகராட்சித் தேர்தல் ஆகியவைகளில் வாக்களிக்கலாம்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: தலைவரவர்களே, 18 வயது வந்தவர்களுக்கு வாக்குரிமை அளிக்கின்ற திட்டத்தை அமல் படுத்துவதுபற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறினார்கள். அதேபோல, ஆண்களுக்கு 18 வயது என்றும், பெண்களுக்கு 16 வயது என்றும்—'ஸ்வீட் சிக்ஸ்டீன்' என்ற வகையில் செய்து வாய்ப்பு அளிக்கப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, 18 வயது என்று கூறுகின்ற நேரத்திலேயே, அதாவது மேஜர் என்று சொல்கின்ற வயதே 18 தான். ஆகவே, ஆண்களைப்போல் பெண்களுக்கும் சம உரிமை வேண்டுமென்று சொல்கின்ற இந்த நேரத்தில் பெண்களுக்கு 16 என்றும், ஆண்களுக்கு 18 என்றும் வைப்பது சரியாக இருக்காது. ஸ்வீட் சிக்ஸ்டீன் என்று சொன்னார்கள், 13 முதல் 19 வயது வரையில் டீன் ஏஜ்தான்.

திரு. ரா. உமாநாத்: தலைவரவர்களே, தேர்தலைத் தள்ளிப் போடும் உத்தேசம் ஏதும் உண்டா என்ற கேள்விக்கு இல்லை என்று கனம் அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் 18 வயது வந்தவர்களுக்கான லிஸ்டே இன்னும் தனியாக

1980 ஜூலை 7]

எடுக்கவில்லை. அதை பாஸ் செய்வது என்று சொல்கிறபொழுது எனக்கு உண்மையிலேயே அச்சமாக இருக்கிறது, இது தள்ளிப் போடப்படுமோ என்று. இதே அவையிலே முன்பு ஒரு வாக் குறுதியை மாண்புமிகு அமைச்சர் திரு. காளிமுத்து அவர்கள் கொடுத்தார்கள். இரண்டு தடவை ஒத்திவைக்கப்பட்ட பிறகு, 'டெஃபனிட் கமிட்மெண்ட்' கேட்டோம், நானே கேட்டேன். செப்டம்பர் மாதம் மழைக் காலமாயிற்றே, மறுபடியும் தள்ளி வைக்கப்படுமா என்று கேட்டேன். அப்பொழுது, ''அடாது மழை பெய்தாலும் விடாது தேர்தல் நடக்கும்'' என்று சொன்னார் கள். கடைசியிலே, மழை பெய்யாமலேயே தேர்தல் நடை பெறாமல் போய்விட்டது. ஆகவே, நான் அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்வது என்னவென்றால், இந்தத் தடவை 'டெஃபனிட் கமிட்மென்ட்' முறையில், தள்ளிப்போட மாட் டோம் என்ற 'டெஃபனிட் கமிட்மென்டை-ஐ' இந்த அவையில் கொடுக்கத் தயாரா என்று கேட்க விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:</u> பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே ஆளுநர் உரையிலே இது குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறது. தேர்தலைத் தள்ளிப் போடக்கூடாது என்ற எண்ணத்தோடுதான் இந்த அரசு இருக்கிறது. இந்த 18 வயது வந்தவர்களுக்கு வாக்குரிமை என்பதை அனைத்துக் கட்சித் தலைவர்களெல்லாம் முடிவெடுத்துவிட்டால், அந்தப் பணி யைத் தொடர்ந்து நடத்த—அதற்கு ஏறக்குறைய ஆறு மாத காலம் பிடிக்கும் என்று நினைக்கிறேன். அப்படி 6 மாதங்களில் முடிந்தவுடனே தேர்தலை வைத்துக் கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தோடுதான் இந்த அரசு இருக்கிறது என்பதைத் தெரி வித்துக்கொள்கிறேன்.

<u>திரு. இரெ. இராசமாணிக்கம்:</u> பேரவைத் தலைவர் அவர் களே, ஊராட்சி மன்றத் தேர்தலை இன்னும் 6 மாத காலத்திற் குள்ளே நடத்துவதாக அமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்த 6 மாத கால வரையில் ஊராட்சிமன்ற நிர்வாகம் சரிவர நடைபெற ஏதாவது மாற்று ஏற்பாடுசெய்ய உத்தேசித்திருக்கிறார் களா ?

<u>மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:</u> பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே தனி அதிகாரிகள் இருக்கின்றார்கள். 30–9–1980-க்குள்ளும், ஊராட்சி மன்றங்களுக்கு 11–9–1980–க் குள்ளும் அவர்களுடைய காலகட்டம் முடிய இருக்கிறது. அதற் குரிய சட்ட மசோதாக்களும் தயாராக இருக்கின்றன.

<u>திரு. என். எஸ். வி. சித்தன்:</u> போரவைத் தலைவர் அவர் களே, கடந்த தேர்தலிலே 21 வயது வந்தவர்களுக்கு வாக்குரிமை என்ற நிலைமை இருந்தபோது 21 வயதுக்கு குறைவானவர்களும் வாக்காளர் ஜாபிதாவில் இருந்தார்கள் என்ற குற்றச்சாட்டு

ஏற்கனவே இருக்கிறது. அப்படியிருக்கும்போது, அதனை 18 வயது நிர்ணயித்தால், 14, 15 வயதானவர்கள் கூட, வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்படுகின்ற சூழ்நிலை இருக்கும். எனவே, 21 வயதை, 18 வயதாக்குவது குறித்து மத்திய அரசிடம் ஏதாவது ஆலோசனை கேட்கப்பட்டதா? அதற்கு ஏதாவது பதில் வந்ததா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, ஊராட்சி மன்ற நகராட்சி மன்ற மாநகராட்சி மன்ற தேர்தலுக்கு வாக்காளர் வயதைக் குறைப்பதற்கு மத்திய அரசிடம் அனுமதி தேவை இல்லை. ஏனென்றால், ஏற்கனவே நான் சொன்னதைப் போல் மேற்கு வங்காளம், கேரளம், ஆந்திரா போன்ற மாநிலங்களில் 18 வயதாகக் குறைக்கப்பட்டு தேர்தல் நடத்தப்படுகிறது. ஆகவே, அப்படிப்பட்ட பிரச்சினை இருக்கிற காரணத்தால் மத்திய அரசை நாட வேண்டிய அவசியம் தற்போது இல்லை. ஆனாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 21 வயது வந்தவர்களுக்கெல்லாம் ஓட்டுரிமை என்று சொல்லி, அந்தப் பட்டியலிலே 18 வயது வந்தவர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். நான், அவர்களுக்குப் பணிவோடு சுட்டிக் காட்டுவதெல்லாம், அந்த நிலை அப்படியிருந்தால், அதை அப்பொழுதே அவர்கள் தெரிவித்திருக்கலாம். வாக்காளர் சேர்க்கப்பட்ட காலமோ, கவர்னர் ஆட்சிக் காலம். உங்களுடைய ஆட்சிக்காலத்தில் தான் அவ்வாறு நடந்தது என்றால், நீங்கள் அப்பொழுதே நடவடிக்கை எடுத்திருக்கலாம். அப்பொழுது புகார் வந்தபோது சரியாகத்தான் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்று நீங்கள் சொல்லியிருப்பதால், இப்பொழுது புகார் கூறுவது சரியல்ல என்று தலைவர் மூலமாகச் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு வே. இரா. ஜெயராமன்: தலைவரவர்களே, இந்த ஊராட்சித் தேர்தல்களில், குறிப்பாக, பெண்களுக்கென தனியாக வார்டு பிரிவினைகள் செய்யப்படுகின்ற உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, அதுபோன்ற நிலைமைகள் பரிசீலிக்கப்படும்.

திரு செ. சிவசாமி: தலைவரவர்களே, 18 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு ஓட்டுரிமை கொடுப்பது என்பது நீண்டகாலமாக, இந்தச் சபையிலே எல்லா எதிர்க்கட்சிகளாலும் சரி, ஆளும் கட்சியானாலும் சரி வரவேற்கப்பட்டிருக்கிறது. அந்தச் சமயத்திலும் நாங்கள் வரவேற்கிறோம். அதைப்பற்றி யாரிடமும் கேட்க்க வேண்டிய அவசியம் இல்லையென்று தெளிவுபடுத்தினீர்கள். அதே சமயத்தில் கடந்த சட்டசபையிலே ஏற்கனவே இருந்த இத்துறை அமைச்சரவர்கள் பல தடவை

1980 ஜூலை 7]

வாக்குறுதி கொடுத்தும், மீண்டும் தேர்தலை நடத்தவில்லை. இந்தத் தடவையாவது குறிப்பிட்ட காலத்தில் தேர்தல் நடத்த வேண்டுமென்று நாங்கள் கேட்ட காலத்திலே, தலைவரைக் கேட்டுச் சொல்கிறேன் என்றார்கள். நான் அப்பொழுது, தலைவர் இங்குதான் இருக்கிறார்கள், கேட்டுச் சொல்லுங்கள் என்று வேண்டுகோள் விடுத்தேன். அப்படிக் கேட்டுக் கொண்டுங் கூட தேதி குறிப்பிடாமல், நீட்டித்து விட்டார்கள், அந்த நிலைமை இனியும் நீடிக்கப்படாது என்பதற்கு உறுதிசொல்லுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, மீண்டும் அந்த நிலை நீடிக்கக்கூடாது என்கிற உறுதியோடுதான் நாங்கள் அறிவித்திருக்கிறோம்.

திரு ப. குருசாமி: தலைவரவர்களே, நாடாளுமன்றம், சட்டமன்றம் இவை அனைத்திலும், அரிசனங்களுக்கு ரிசர் வேஷன் தொகுதிகள் ஒதுக்கப்படுகின்றன. அதைப்போலவே ஊராட்சிகளுக்கும் ரிசர்வேஷன் ஒதுக்கப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு. பேரவைத் தலைவரவர்களே, அதற்கு தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

திரு பாபு ஜனார்த்தனன். பேரவைத் தலைவரவர்களே, வாக்குரிமைக்கானவர்களது பெயர்களைப் பதியும்பொழுது அவர்கள் 18 வயது என்று சொன்னால், 12 வயதானவர்களது பெயர்களையும் சேர்த்துக் கொள்கிறார்கள். ஆகவே, பொதுவாக, 18 வயதானவர்கள், அல்லது அதிகமானவர்கள் என்று நிர்ணயிப்பதற்கு பிறப்புரிமைச் சான்றிதழ்கள் பெற்று வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, இப்பொழுது இதுபோன்ற வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்படு கிற நேரத்தில் சந்தேகம் வந்தாலும் அல்லது வயது குறைவாக இருக்கிறது என்கிற காரணத்தைக் காட்டி, அவர்களுக்கு வாக்குரிமை கொடுக்கக்கூடாது என்று புகார்கள் வந்தாலும் உடனடியாகக் கவனிக்கப்படுகிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனையை எந்த எந்த நேரங்களில் பிரயோகிக்க முடியுமோ, அந்தந்த நேரங்களில் பிரயோகிக்கலாம்.

திரு. ந. சிவஞானம்: தலைவரவர்களே, பெரிய ஊராட்சிகள் இருக்கிற காரணத்தால், இந்தத் தேர்தலுக்குள் பெரிய ஊராட்சி மன்றங்கள் பிரிக்கப்படுமா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

[1980 ஜூலை 7

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, ஏற்கனவே சில ஊராட்சி மன்றங்களைப் பிரிப்பதற்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், புதிதாக அவைகளை எல்லாம் பிரிக்க வேண்டுமென்ற யோசனையிருந்தாலும், இப்பொழுதுள்ள நிலைமையில் பிரிக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9–10)

திரு. இரா. கருப்பையா: தலைவரவர்களே, இந்த ஊராட்சி மன்றத் தேர்தல்களில், கட்சிக்காக சின்னம் ஒதுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, இவைகளை எல்லாம் 11–7–1980 அன்று நடைபெற இருக்கின்ற அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்திலே விவாதிக்கலாம்.

திரு. அ. செல்வராசன்: தலைவர் அவர்களே, இந்த 18 வயது என்று சொல்லுகிறபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சந்தேகம் வருகிறபோது நிவர்த்தி செய்து கொள்ள லாம் என்று சொன்னார்கள். ஆனால் அங்கே இருக்கின்ற தேர்தல் அதிகாரிகள் 15 வயதுள்ள ஆணோ பெண்ணோ ஓட்டுப் போடப் போகும் போது, வாக்காளர் பட்டியலில் இடம் பெற்று விட்ட காரணத்தாலேயே அவர்களுக்கு வாக்குரிமை தந்துவிடு கிறார்கள். எனவே, திரு பாபு ஜனார்த்தனன் அவர்கள் சொன் னதைப் போல பர்த் சர்ட்டிபிகேட் கொண்டு வந்து பதிவு செய்தால் நலமாக இருக்கும் என்பதால், அதைப்பற்றி அரசு முயற்சி செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, இதுபோன்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனையைப் பரிசீலிக்க முயற்சி எடுக்கப்படும்.

திரு. சு. முத்துக்கிருஷ்ணன்: தலைவர் அவர்களே,

* * *

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர், கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு இருக்கலாமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தில் துணைக் கேள்வியில் குற்றச்சாட்டுக்கள் இருக்கக்கூடாது.

---

*மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

1980 ஜூலை 7]

திரு. இரெ. இராசமாணிக்கம்: தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி பதிவேட்டில் இருக்கலாமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்தக் கேள்வியைப் பதிவேட்டில் இருந்து நீக்கிவிடும்படி உத்தரவிடுகின்றேன்.

திரு. மி. வின்சென்ட்: தலைவரவர்களே, 21 வயதுள்ளவர்களுக்கு வாக்குரிமை இருக்கும்போது, வேட்பாளர்கள் 25 வயது உள்ளவர்களாக இருக்க வேண்டும் என்று விதி இருக்கிறது. தற்போது 18 வயதாக வாக்குரிமையைக் குறைக்கும் போது, வேட்பாளர்கள் தேர்தலில் நிற்கும் வயது வரம்பு குறைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, அதுபோன்ற யோசனை அரசுக்கு இல்லை.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவரவர்களே, தமிழகத்திலே ஏதேனும் அரசியல் கட்சிகள் 18 வயதாகக் குறைக்கும் திட்டத்தை எதிர்க்கிறார்களா? அதுபற்றி அரசு பரிசீலித்துள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, இதுபோன்ற புகார்கள் இதுவரை வரவில்லை. ஆனாலும் 11–7–1980 அன்று அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் நடக்க இருக்கிற காரணத்தினாலே யார் யார் எதிர்க்கிறார்கள் யார் யார் ஆதரிக்கிறார்கள் என்பது தெளிவாக விளங்கும்.

திரு. சு. பாலன்: தலைவர் அவர்களே, சென்னை நகர சபையைப் பொறுத்தவரையில் தேர்தல் நடத்துவதற்காக ஏற்கனவே வாக்காளர் பட்டியல் தயாராக இருப்பதாக அறிகிறேன். இப்போது 18 வயதாகக் குறைக்கிற காரணத்தால், அதே பட்டியலை வைத்துத் தேர்தலை நடத்துவார்களா, அல்லது தனியாக வாக்காளர் பட்டியலைத் தயாரிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, 18 வயது என்று சொல்லுகிறபோதே, தனிப் பட்டியல் தயாரித்து ஆகவேண்டும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவர் அவர்களே, ஏற்கெனவே மந்திரி அவர்கள் பேசும்போது 11–7–1980 அன்று அரசியல் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் பல பிரச்சினைகள் பரிசீலிக்கப்படும் என்று சொன்னார்கள். சென்ற சட்ட

மன்றக் கூட்டத்திலே இந்த உள்ளாட்சி தேர்தல் பற்றிய தீர்மானம் வருகிறபோது, 18 வயதாகக் குறைக்கப்படும் என்பது மட்டுமல்ல. ஊராட்சித் தேர்தலிலும், ஊராட்சி மன்றத் தேர்தலிலும், அரிசனங்களுக்கும், பெண்களுக்கும் இடம் ஒதுக்கப்படும் என்று சொன்னார்கள், அது பற்றி இப்போது முடிவெடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, அது பற்றி அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்திலே பேசலாம்.

திரு. மு. ஜான் வின்சென்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றத் தலைவர் தேர்தலுக்குப் போட்டியிடுகிறவர், ஊராட்சி ஒன்றியத் தலைவர் தேர்தலுக்கும் போட்டியிட முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: அது விதி முறைப்படி நடக்கும்.

திரு. இல. பலராமன்: தலைவர் அவர்களே, தேர்தல்கள் ஒழுங்காக நடக்கவேண்டுமானால், வாக்காளர்களுக்கு அடையாளச் சீட்டில் போட்டோ ஒட்டிக் கொடுத்தால் நல்லது. அதைச் செய்யும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, போட்டோ ஒட்டிய அடையாள அட்டைகள் வாக்காளர்களுக்குக் கொடுப்பதன் மூலமாக தேர்தல்கள் ஒழுங்காக நடக்கும் என்று உறுப்பினர் தெரிவித்த கருத்து உடனடியாக நடக்கும் காரியம் அல்ல. ஆகவே, உறுப்பினர்கள் இது போன்ற கருத்துக்களை எல்லாம் இந்த மாதம் 11ஆம் தேதி நடக்க இருக்கும் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தெரிவிக்கலாம்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் 16. 18 வயதிலேயே திருமணம் செய்து விடுவதால், கிராமங்களில் வாக்காளர்களைச் சேர்க்கின்ற பணியாளர்கள் வீட்டிற்கு வருகிறபோது, தாலி அணிந்து இருக்கும் பெண்களைப் பார்த்து விட்டு, 21 வயது ஆகியிருக்கும் என்று வாக்காளர் பட்டியலில் பெயரைச் சேர்த்து விடுகிறார்கள். இதனால் ஆண்கள் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு ஏதாவது மாற்று ஏற்பாட்டை அரசு செய்யுமா ? வாக்காளர்களுக்கு போட்டோ ஒட்டிய அடையாளச் சீட்டு கொடுத்து தேர்தல் நடத்தப்படும் என்று முன்பிருந்த உள்ளாட்சித் துறை அமைச்சர் இந்த அவையில் ஏற்கெனவே அறிவித்து இருக்கிறார்கள் என்பதால், இப்போது அதைச் செயல்படுத்தப்படுமா ?

1980 ஜூலை 7]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, பெண்களுக்குத் தாலி இருப்பது போல், ஆண்களுக்குத் தாலி வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் நினைக்கிறார்களோ என்று நான் சந்தேகப்படுகிறேன். அப்படிப்பட்ட யோசனை எதுவும் இந்த அரசுக்கு இல்லை. ஆனால், குறிப்பாக வயதை அறிந்து, பக்கத்தில் இருக்கின்றவர்களிடத்தில் விவரம் கேட்டு, அதன் அடிப்படையில்தான் வாக்காளர் பட்டியல்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. அதேபோன்று மாண்புமிகு உறுப்பினர் சொன்ன மற்ற யோசனை அரசின் ஆய்வில் தற்போது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: தலைவர் அவர்களே, நான் கேட்க நினைத்த கேள்வியை ஏற்கெனவே கேட்டுவிட்டார்கள். இருந்தாலும் நான் ஒரு கேள்வியைக் கேட்க விரும்புகிறேன். தமிழ்நாட்டில் 374 பஞ்சாயத்து யூனியன்கள் இருக்கின்றன. அதிலே 10 சதவீதம் பெண்களுக்கு என்று தனியாக ஒதுக்கி, அதிலே அவர்கள் தலைவராக வரலாம் என்கிற யோசனையை அரசு பரிசீலிக்குமா? அவ்வாறே, அரிசனங்களுக்கு என்று 15 சதவீதம் இடங்கள் ஒதுக்கி அதிலே அவர்கள் தலைவராக வருவதற்கு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூட அண்மையில் நிகழ இருக்கிற அனைத்துக் கட்சி கூட்டத்தில் கலந்து கொள்வார்கள் என்று நான் கருதுகிறேன். அப்போது அவர்கள் இத்தகைய மேலான யோசனைகளைத் தெரிவித்தால், அரசு முடிவு எடுக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, 374 ஊராட்சி ஒன்றியங்களில் 200 ஒன்றியங்களில் கூட பெண்கள் போட்டியிட்டு தலைவராக வரலாம். ஆகவே ஒதுக்கவேண்டும் என்பது அல்ல பிரச்னை.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, இப்போது 18 வயது ஆகிற நிலையில், 14 வயது, 16 வயது ஆனவர்கள் கூட வாக்களித்து விடுவார்களோ என்ற அச்சம் மக்கள் மத்தியில் இருக்கிறது. ஆகவே, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் சர்வ கட்சிக் குழு ஒன்றை அமைத்து, 18 வயது எய்தியவர்கள் தான் வாக்காளர்களாகச் சேர்க்கப்படுகிறார்களா என்பதைக் கண்காணிக்க ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒரு குழு அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட யோசனை அரசுக்கு இல்லை.

[1980 ஜூலை 7

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, இந்தத் தேர்தலை தள்ளிப்போடுவார்களா, குறித்த காலத்தில் நடத்துவார்களா என்கிற சந்தேகம் பல மாண்புமிகு அங்கத்தினர்கள் மத்தியில் கிளம்பியுள்ளது. அந்தச் சந்தேகங்களுக்கு இடம் கொடுக்காமல், தமிழக அரசு 18 வயது வந்தவர்களுக்கு ஓட்டுரிமைக் கொடுக்கப் படும் என்கிற வாக்குறுதியை ஏற்கெனவே இந்த அவையில் கொடுத்துள்ளது. அந்த அடிப்படையில் வாக்காளர் பட்டியலைத் தயாரிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, அனைத்துக்கட்சித் தலைவர்களின் மேலான யோசனையைப் பெற்றுக்கொண்டு, அதைத் தயாரிக்கத் தொடங்கலாம் என்கிற வகையில் தான் வருகின்ற 11ஆம் தேதி கூட்டம் வைத்து இருக் கிறோம். இப்போதே ஆரம்பித்தாலும் அந்தப் பட்டியல் தயாரிக்க 6 மாத காலம் பிடிக்கும். ஆகவே உங்களுடைய மேலான யோசனையைச் செயல்படுத்த வேறு யோசனை இருந் தால் அவைகளை எடுத்துக்கொண்டு, அரசு பரிசீலிக்கும்.

திரு. மு. ப. முனுசாமி: தலைவர் அவர்களே, அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் கொடுக்கும் கணக்கு சரியா, அல்லது அரசு அலுவலகத்தில் வைக்கப்பட்டு இருக்கும் கணக்கு சரியா ? அதை வைத்து ஏன் வாக்காளர் பட்டியல் தயாரித்துக்கொள்ளக் கூடாது ?

(முற்பகல் 9-20)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, சிலருக்கு பிறந்த நாள் ஜாதகம் எல்லாம் இருக்கும், வைத்திருப்பார்கள் ; சிலருக்கு அந்த விவரங்கள் தெரிந்திருக்கும். அப்படி அவர்கள் விவரங்கள் வைத்துக் கொள்ளாமல் இருந்தாலும் பக்கத்திலே இருக்கின்ற அடுத்தவர்களைக் கேட்டு, இந்த விவரங் களைத் தெரிந்து, வாக்குரிமை அளிப்பது சிறந்தது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. உ. சுப்பிரமணியன்: தலைவரவர்களே, அரசியல் சட்டத்தில் ஒவ்வொன்றுக்கும் வயது குறிப்பிட்டிருக்கிறார்கள். வாக்காளருக்கு 21 வயது, சட்ட மன்ற வேட்பாளருக்கு 25 வயது, மேல்சபை உறுப்பினருக்கு 30 வயது, ஜனாதிபதிக்கு 35 வயது என்று நிர்ணயித்திருக்கிறார்கள். ஒவ்வொன்றுக்கும் 'மெச்சூரிட்டி ஆஃப் ஏஜ் அண்ட் எக்ஸ்பீரியன்ஸ்' வேண்டும் என்ற அடிப்படையில் இப்படி நிர்ணயித்திருப்பார்கள். ஆகவே, இப்போது 21 வயது என்பதை 18 வயது என்று குறைப்பதற்கு என்ன அவசியம் ? அதற்கு 18 வயதிலேயே 'மெச்சூரிட்டி ஆஃப் ஏஜ் அண்ட் எக்ஸ்பீரியன்ஸ்' வந்துவிட்டது என்று நினைக் கிறீர்களா ?

ALONE TRIUMPHS

1980 ஜூலை 7]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, 'மெச்சூரிட்டி ஆஃப் ஏஜ் அண்ட் எக்ஸ்பீரியன்ஸ்' என்று சொன்னால் அறிவு முதிர்ச்சி அடைவது என்று பொருள். அது 6ஆவது வயதிலிருந்து ஆரம்பமாகிறது. தற்போது சொத்துரிமைக்குக்கூட சட்டத்தின் அடிப்படையிலே 18 வயது என்று வைத்திருக்கிறோம். 18 வயதில் 'மெச்சூரிட்டி' அடைந்து விடுகிறார்கள் என்பதால் தான் 18 வயதிலேயே சொத்துரிமைக்கு இந்தச் சட்டத்தில் இடமிருக்கிறது. அப்படிப்பட்ட நேரத்தில் வாக்காளர்களுக்கு ஏன் 18 வயது என்று வைத்துக்கொள்ளக்கூடாது என்பதை வருகின்ற அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் அவர்கள் பேசலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையில் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்பு.

### உரிமைப் பிரச்சினை

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினை.

பேரவையின் 246 வது விதியின் கீழ், திரு. ரகுமான்கான் அவர்கள் அவை உரிமை மீறல் குறித்த ஒரு பிரச்சினைக்கு அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இது பத்திரிகையின் மீது உள்ளதால், அப்பத்திரிக்கைக்கு எழுதிக் கேட்டு விளக்கம் பெற்றபின் பேரவையில் எடுத்துக் கொள்ளலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## 3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### நோட்டுப் புத்தகக் காகிதம் தவறாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சென்னை பேப்பர் மற்றும் போர்டு கன்வெர்ட்டர்ஸ் அசோசியேஷன் மத்திய அரசிடமிருந்து 1800 டன் காகிதத்தை மலிவு விலையில் பெற்று 900 டன் காகிதத்தை மட்டுமே நோட்டுப் புத்தகமாக தயாரித்து தமிழ்நாடு பாடநூல் நிறுவனத்திற்கு வழங்கிவிட்டு மீதி 900 டன் விதிகளுக்கு புறம்பாக அதிக விலைக்கு வெளி மார்க்கெட்டில் விற்றதனால் ஏற்பட்டுள்ள பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி பற்றி விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை